## சுருக்கம்

நாமக்கல் மாவட்டம் – பெரியார் நினைவு சமத்துவபுரம் – 10.02.1999–அன்று எம்.மேட்டுப்பட்டி பெரியார் நினைவு சமத்துவபுரம் திறப்பு விழாவிற்கு மாண்புமிகு முதலமைச்சர் வருகையின்போது ஏற்பட்ட செலவினம் – ஒப்பளிப்பு வழங்கி ஆணைகள் வெளியிடப்படுகிறது.

---

ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் (மாஅதி1) துறை

அ.ஆ. (1டி) எண். 111 நாள்: 09.03.2010

படிக்கப்பட்டவை :

1. அரசு கடித எண். 39484/மதி2/2000, நாள் 10.5.2005
2. முதன்மைச் செயலாளர் மற்றும் வருவாய் நிர்வாக ஆணையர் கடித எண். ஆர்ஏ 7(2)/44420/01, நாள் 6.5.2009.
3. ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி ஆணையரின் ந.க.எண். 58003/09/ஜி1, நாள் 20.8.2009.

-------

**ஆணை :**

1998–2001–ம் ஆண்டுகளில் அமைக்கப்பட்ட பெரியார் நினைவு சமத்துவபுரங்களுக்கு திறப்பு விழா செய்தவகையில் ஏற்பட்ட செலவினத்திற்கு அரசின் ஒப்பளிப்பு ஆணை தேவைப்படும் இனங்களுக்கு புதிய செயற்குறிப்புகள் சமத்துவபுரம் வாரியாக தனித்தனியாக அனுப்பி வைக்கும்படி படிக்கப்பட்ட ஒன்றில் காணும் 10.05.2005 நாளிட்ட அரசு கடிதத்தில் ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி ஆணையர் கேட்டுக் கொள்ளப்பட்டார்.

2. அரசு முதன்மைச் செயலாளர் மற்றும் வருவாய் நிர்வாக ஆணையர் படிக்கப்பட்ட இரண்டில் காணும் தனது கடிதத்தில் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் 10.02.1999 அன்று நாமக்கல் மாவட்டம், எம்.மேட்டுப்பட்டி பெரியார் நினைவு சமத்துவபுரம் திறப்பு விழாவில் கலந்து கொள்ள வருகை புரிந்தது தொடர்பாக பந்தல் அலங்கார பணி செய்த வகையில் ஒப்பந்தக்காரர் திரு.P. மணி என்பவருக்கு வழங்கப்பட வேண்டிய நிலுவைத்தொகை வழங்கப்படாததால், ஒப்பந்தக்காரர் சென்னை உயர்நீதிமன்றத்தில் நீதிப்பேராணை எண். 9804/07 என்ற வழக்கு தொடர்ந்து, தனக்கு வழங்கப்படவேண்டிய நிலுவைத் தொகையில் பாதித் தொகையை வழக்கு முடிவுக்கு உட்பட்டு முதலில் ரூ.1,62,000/–ஐ விடுவிக்குமாறு கோரியுள்ளதாகத் தெரிவித்து அதற்கான அரசின் ஒப்பளிப்பு வழங்குமாறு கோரியிருந்தார். அக்கோரிக்கையின் மீதான குறிப்புரை ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி ஆணையரிடம் கோரப்பட்டது.

3. படிக்கப்பட்டவை 3–ல் உள்ள கடிதத்தில் ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி ஆணையர், 10.02.1999–அன்று நாமக்கல் மாவட்டம், M.மேட்டுப்பட்டி பெரியார் நினைவு சமத்துவபுரம் திறப்பு விழாவில் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் தலைமையேற்று கலந்து

கொண்ட விழாவில் ஏற்பட்ட செலவினத் தொகையான ரூ.3,23,988/–ஐ ஒப்பந்தக்காரரான திரு. P.மணி என்பவருக்கு வழங்க அரசின் ஆணையினை கோரியிருந்தார்.

4. அரசு முதன்மைச் செயலாளர் மற்றும் வருவாய் நிர்வாக ஆணையர் மற்றும் ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி ஆணையர் ஆகியோர்களின் கருத்துருவினை அரசு கவனமாகப் பரிசீலனை செய்து மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் 10.2.99 அன்று நாமக்கல் மாவட்டம், எம்.மேட்டுப்பட்டி பெரியார் நினைவு சமத்துவபுரம் திறப்பு விழாவிற்கு வருகை புரிந்தது தொடர்பாக ஏற்பட்ட சிவில் செலவினத் தொகையான ரூ.3,23,988/– (ரூபாய் மூன்று இலட்சத்து இருபத்து மூன்றாயிரத்து தொள்ளாயிரத்து எண்பத்து எட்டு மட்டும்) ஒப்பந்தக்காரர் திரு P. மணி என்பவருக்கு வழங்கிட சிறப்பு இனமாகக் கருதி ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி ஆணையருக்கு அனுமதி அளித்து அரசு ஆணையிடுகிறது.

5. மேலே பத்தி 4–ல் ஒப்பளிப்பு செய்யப்பட்டுள்ள தொகை கீழ்காணும் கணக்குத் தலைப்பின் கீழ் பற்று வைக்கப்படவேண்டும்.

2075–00–பல்வகைப்பொதுவான பணிகள்–800–ஏனைய செலவு – I–திட்டத்தில் சேராதது – GJ–மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் மற்றும் ஏனைய அமைச்சர்கள் மாவட்டங்களுக்கு வருகை தருவது தொடர்பான செலவுகள் – 17 – சிறுபணிகள் (த.தெ.கு.2075–00–800– GJ–1702)

6. மேலே பத்தி 4–ல் ஒப்பளிப்பளிக்கப்பட்டுள்ள செலவினத்திற்கான நிதியொதுக்கம் இறுதி திருத்த நிதியொதுக்கம் 2009–10ல் ஒதுக்கீடு செய்யப்படும். அத்தகைய நிதியை எதிர்நோக்கி இச்செலவினத்தை மேற்கொள்ள ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி ஆணையர், சென்னை–15 அவர்களுக்கு அதிகாரம் அளிக்கப்படுகிறது. இச்செலவினத்தினை இறுதி திருத்த நிதியொதுக்கத்திற்கான 2009–10க்கான கருத்துக்கள் அனுப்பும்போது தவறாமல் சேர்த்து அனுப்பி வைத்திடுமாறும் ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி ஆணையர் அறிவுறுத்தப்படுகிறார்.

7. இந்த ஆணை நிதித்துறையின் அ.சா.எண். 5600/ஊ.வ./2010, நாள் 5.3.2010–ல் பெற்ற இசைவுடன் வெளியிடப்படுகிறது. இதற்கான கூடுதல் நிதியொதுக்கப் பேரேட்டு எண். 1736 (ஆயிரத்து எழுநூற்று முப்பத்து ஆறு).

(ஆளுநரின் ஆணைப்படி)

க. அஷோக் வர்தன் ஷெட்டி,
அரசு முதன்மைச் செயலாளர்.

பெறுநர்
முதன்மைச் செயலாளர் மற்றும் வருவாய் நிர்வாக ஆணையர், சென்னை–5,
ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி ஆணையர், சென்னை–15.
மாவட்ட ஆட்சித் தலைவர், நாமக்கல் மாவட்டம்,
தலைமைப் பொறியாளர் (கட்டிடங்கள்), சென்னை–5.
மாநில கணக்காயர், சென்னை.18/35.
**நகல்**
வருவாய்த் துறை, சென்னை–9.
நிதி(வ.செ.தி.பொது–II)/வருவாய்/ஊ.வ.) த்துறை, சென்னை–9.

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

பிரிவு அலுவலர்.